<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 148/2025</u>

<u>LW:6, PW:3</u>

<u>**08.04.2026**</u>

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. இராஜேந்திரன் | த / பெ. | திரு. குஞ்சிதபாதம் |
| கிராமம் | : | சங்கேந்தி | தாலுக்கா | முத்துப்பேட்டை |
| தொழில் | : | உதவி தொடக்க கல்வி அலுவலர் (ஓய்வு) | வயது | 67 |

<u>**எதிரிகள் 1, 2 ஆஜர். எதிரி 3 ஆஜர் இல்லை. 355 BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி திரு. இராஜேந்திரன் என்பவரை பொருளாதார குற்றப்பிரிவு தலைமை காவலர் D. கண்மணிராஜ் HC No. 1373 அடையாளம் காட்டினார்.**</u>

<u>**முதல்விசாரணை**</u>

நான் முத்துப்பேட்டை தாலுக்கா சங்கேந்தி என்ற ஊரில் வசித்து வருகிறேன். நான் உதவி தொடக்க கல்வி அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். எனது அப்பா பெயர் மீ. குஞ்சிதபாதம் ஆகும். எனது அப்பா 2003 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். எனது அப்பா உயிருடன் இருந்த காலத்தில் திருத்துறைப்பூண்டி மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து அதிகாரி ஒருவர் எனது அப்பாவை விசாரித்து வாக்குமூலம் பெற்றார். **என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் எனது அப்பாவின் கையொப்பங்கள் ஆகும். வாக்குமூலத்தில் உள்ள என் அப்பாவின் கையொப்பங்கள் அ.த.சா.ஆ 5 (3 வரிசை) ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

எனது அப்பா திருத்துறைப்பூண்டி வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில் வீட்டு மனை ஈடாக வைத்து ரூ.80,000/- கடன் கோரினார். என் அப்பா கடன் கோரிய போது நானும் அவருடன் சேர்ந்து வந்தேன். என்னிடம் காட்டப்படும் அடமான கடன் பத்திரத்தில் என் அப்பாவும் நானும் கையொப்பம் செய்தோம். அந்த கடன் பத்திரத்தில் உள்ள முதல் கையொப்பங்கள் என் அப்பாவின் கையொப்பங்கள் ஆகும். **கடன் பத்திரத்தில் உள்ள என் அப்பாவின் கையொப்பங்கள் அ.த.சா.ஆ.6 ( வரிசை 4) ஆக குறியீடு செய்யப்படுகிறது. அடமான கடன் பத்திரம் அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அதன் பின்னர் என் அப்பா பெயரில் ரூ.25,475 ரூபாயிற்கு காசோலை கொடுக்கப்பட்டு அந்த காசோலையின் பின்புறம் உள்ள கையொப்பங்கள் என் அப்பாவின் கையொப்பங்கள் ஆகும். **காசோலை எண்.085644 பின்புறம் உள்ள கையொப்பங்கள் அ.த.சா.ஆ.8 ( வரிசை 2) ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

என்னிடம் காட்டப்படும் காசோலை எண்.016356 பின்புறம் உள்ள கையொப்பங்கள் என் அப்பாவின் கையொப்பம் இல்லை. என் அப்பா அவர் கையொப்பம் செய்யும் போது தமிழில் தான் மீ. என்று Initial செய்வார். பொருளாதார குற்றப்பிரிவு போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

போலிசார் என்னை வீட்டில் வந்து விசாரித்தார்கள். வேறு எங்கும் என்னை விசாரிக்கவில்லை. நான் அந்த சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்றால் சரிதான். எனது அப்பா இறந்த தேதி மாதம் எனக்கு நினைவில் இல்லை. வருடம் 2003 ஆம் ஆண்டு ஆகும். எனது அப்பாவை போலிசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. அந்த காலத்தில் எனது அப்பா 8 ம் வகுப்பு வரை படித்திருந்தார் ஆங்கிலம் தெரியாது. முதல் விசாரணையில் என்னிடம் காட்டப்பட்ட நானும் கையெழுத்திட்ட அடமான பத்திரம் முத்துப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணமா என்றால் ஆமாம்.

அப்பா கடன் வாங்கியதாக சொல்லப்படும் காலத்தில் நான் ஆசிரியராக இருந்தேன். எனது அப்பா கையெழுத்து போட்ட போது நான் உடன் இருந்தேன் என்பதற்கான எவ்வித ஆவணமும் போலிசார் விசாரணையில்

கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் அப்பாவுடன் நானும் கையெழுத்திட்டுள்ளேன். இந்த விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கேனா என்றால் சொல்லியிருக்கிறேன். என் அப்பா M என்று ஆங்கிலத்தில் கையெழுத்திடமாட்டார் என்பதையும் மீ என்று தான் கையெழுத்திடுவார் என்பதையும் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். அவ்வாறு நான் சொன்னதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

முதல் விசாரணையில் என்னிடம் காட்டப்பட்ட என் அப்பாவின் கையெழுத்துகள் அனைத்தும் அவரால் போடப்பட்டது தான் என்றாலும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் ஒருவரின் கையெழுத்தை பார்த்தவுடன் சொல்லும் பயிற்சி எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் அலுவலராகவும், பள்ளி ஆசிரியராகவும் பணிபுரிந்து வகையில் எனக்கு கீழ் படித்த மாணவரின் ஒவ்வொருவரின் கையெழுத்தையும் தனித்தனியாக அடையாளம் காணும் அறிவும் தெளிவும் எனக்கு உள்ளது. அப்பாவின் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும்.

மேற்சொன்ன தகுதி விவரங்கள் எதுவும் கையெழுத்தை கண்டறிவதற்கான தகுதி இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.08 18:51:37 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்